**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC No.199/2017** **Date : 23 /02 /2023**

**PW1**(முருகன்) **குறுக்கு விசாரணை :** சீராய்வு மனு மாண்புமிகு அமர்வு நீதி மன்றத்தால் அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்).**

1.அ.ச.ஆ.1 விசாரணை அறிக்கை 15/05/2005 அன்றுதான் என்னால் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கான விசாரணை அதிகாரியை 28/05/2003 அன்று தான் நியமித்துள்ளனர் என்றால் சரிதான். விசாரணை அதிகாரியை நியமித்த 90 நாட்களுக்குள் அவர் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்றால் சரிதான். அதற்கு பிறகு இரண்டு முறை அதாவது 30 மற்றும் 30 நாட்கள் கால நீட்டிப்பு செய்ய முடியும் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கான விசாரணை அதிகாரி கால நீட்டிப்பு கோரி மனு ஏதும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. விசாரணையை முடிப்பதற்குதான் கால அவகாசமே தவிர விசாரணை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு கால நீட்டிப்பு தேவையில்லை.

2. விசாரணை அதிகாரியை நியமித்த நாளிலிருந்து 2 ஆண்டுகள் கழித்துதான் அ.சா.ஆ.1 அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

30/11/2003 அன்று விசாரணையை முடித்ததாக கூறியுள்ளார் என்றாலும், கிட்டத்தட்ட 1 ½ ஆண்டுகாலம் அறிக்கை தாக்கல் செய்யாததற்கான காரணம் எதையும் குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.ஆ.1 ல் எங்கயாவது விசாரணை அதிகாரி கையொப்பத்துடன் தேதி இட்டுள்ளாரா என்றால் கடைசி பக்கத்தில் 11/05/2005 என தேதி இட்டுள்ளார். அதை தவிர வேறு எந்த இடத்திலும் எந்த தேதியில் தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என தேதி இடம் பெற வில்லை என்றால் சரிதான்.

3. நான் இந்த அறிக்கையை பெற்ற 30/06/2005 அன்று அதாவது 1 ½ மாதம் கழித்துதான் இந்த வழக்கிற்கான புகாரை நான் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் அந்த புகாரில் அ.சா.1 விசாரணை அறிக்கையை படித்து பார்த்து அதில் சம்பந்தமான ஆவணங்களை பரிசீலணை செய்து அதில் நடவடிக்கை எடுப்பதற்கான முகாந்திரம் உள்ளது என குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன்.

4. இந்த வழக்கிற்கான எதிரி லட்சுமணன் அந்த சங்கத்தில் செயலாளராக பதவி வகித்தார் என்றால் சரிதான். ஒவ்வொரு சங்கத்திற்கும் துணை விதிகள் தனிப்பட்ட முறையில் இருக்கும்என்றாலும் அதில் செயலாளருக்கென பொறுப்புகளும் கடமைகளும் வகுக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். நான் புகார் கொடுத்த போது அந்த சங்கத்தின் துணை விதிகளையும் இணைத்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு கீழ் பணிபுரிந்த விசாரணை அதிகாரி தாக்கல் செய்த அறிக்கையை நான் சரிவர பரிசீலணை செய்யாமல்

எதிரியின் மீது தவறான புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. காலதாமதமாக இந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அந்த அறிக்கை சட்டபடி ஏற்க தகுந்தது அல்ல என்றால் சரியல்ல.

5. இந்த அறிக்கையில் அடிப்படையில் நான் துறை ரீதியான பிரிவு 87-ன் கீழான தண்ட தீர்வு நடவடிக்கைகள் எதையும் நான் பணி புரிந்த காலத்தில் எடுத்தேனா என எனக்கு நினைவில்லை. அந்த நடவடிக்கை எதிரிக்கு எதிராக எடுக்கப்பட்டது என்றாலும், அப்போது எதிரி ஆஜராகி கொடுத்த விளக்கத்தின் அடிப்படையில் அந்த நடவடிக்கை எதிரிக்கு எதிராக கைவிடப்பட்டது என்றாலும் சரியல்ல. சாட்சி மீண்டும் அந்த காலக்கட்டத்தின்போது நான் அங்கு பணியாற்றவில்லை என கூறுகிறார். அ.சா.ஆ.1 ல் குறிப்பிட்டபடி எந்தவித முறை கேடும் நடக்க வில்லை என்றாலும், அதற்கு எதிரி பொறுப்பில்லை என்றாலும், முறையாக விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறான புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.

Judicial